



திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (06–02–2025) மாலை, திருநெல்வேலி – பாளையங்கோட்டையில் நடைபெற்ற 'திருநெல்வேலி மாவட்டக் கழக நிர்வாகிகளுடனான சந்திப்பு' நிகழ்ச்சியில் பங்கேற்று, 2026–ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் பணிகளுக்கான வழிகாட்டுதல்களை வழங்கினார். உடன் கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன், கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என். நேரு ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (6.2.2025) திருநெல்வேலியில், சி.எஸ்.ஐ. திருநெல்வேலி திருமண்டல பேராயர் பர்மதாஸ், குழு மண்டல உறுப்பினர் ஜபராஜ் மற்றும் நிர்வாகிகள் சந்தித்துப் பேசினார்கள். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி.கீதா ஜீவன், தமிழ்நாடு சிறுபான்மை நல ஆணையத்தின் உறுப்பினர் ஹெமில்டன் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.2.2025) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை காந்தி தினசரி சந்தையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில், மகாத்மா காந்தி தினசரி சந்தையில் 40 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள வணிக வளாகம் மற்றும் காய்கனி சந்தை மற்றும் டவுன் நயினார் குளம் மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளை 26 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தி அமைக்கப்பட்டுள்ள சிறுவர் விளையாட்டு அரங்கம், என மொத்தம் 66 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, நாடாளுமன்ற உறுப்பினர் சி. ராபார்ட் புரூஸ், சட்டமன்ற உறுப்பினர்கள் எம். அப்துல் வகாப், ரூபி ஆர். மனோகரன், நயினார் நாகேந்திரன், சட்டப்பேரவை முன்னாள் தலைவர் இரா. ஆவுடையப்பன், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் கே.பி. கார்த்திகேயன், , திருநெல்வேலி மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு, திருநெல்வேலி மாநகராட்சி ஆணையர் டாக்டர் என்.ஓ. சுகபுத்ரா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (6.2.2025) திருநெல்வேலியில், தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத்தின் மாவட்டத் தலைவர் சொரிமுத்து, தமிழ்நாடு விவசாயிகள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பு குழு நிர்வாகி அபிரஹாம் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, தாமிரபரணி, கருமேனியாறு மற்றும் நம்பியாறு உபரி நதிநீர் இணைப்புத் திட்டத்தை தொடங்கி வைக்கவுள்ளதையொட்டி நன்றி தெரிவித்து, கோரிக்கை மனு அளித்தனர். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சட்டமன்ற உறுப்பினர் எம். அப்துல் வகாப் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.2.2025) திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் எதிரே திருநெல்வேலி சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், 11 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் தாமிரபரணி ஆற்றின் கரையோரங்களை சீரமைத்து மேம்படுத்தும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், நாடாளுமன்ற உறுப்பினர் சி. ராபார்ட் புரூஸ், சட்டமன்ற உறுப்பினர்கள் எம். அப்துல் வகாப், ரூபி ஆர். மனோகரன், நயினார் நாகேந்திரன். சட்டப்பேரவை முன்னாள் தலைவர் இரா. ஆவுடையப்பன், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் கே.பி. கார்த்திகேயன், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் கோ. ராமகிருஷ்ணன், திருநெல்வேலி மாநகராட்சி ஆணையர் டாக்டர் என்.ஓ. சுகபுத்ரா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## நெல்லை மாநகராட்சியில்

# ரூ.66 கோடியில் முடிவுற்ற திட்டப் பணிகள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

நெல்லை, பிப்.8-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.2.2025) திருநெல்வேலி, பாளையங்கோட்டை காந்தி தினசரி சந்தையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில், மகாத்மா காந்தி தினசரி சந்தையில் 40 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள வணிக வளாகம் மற்றும் காய்கனி சந்தை மற்றும் டவுன் நயினார் குளம் மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளை 26 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தி அமைக்கப் பட்டுள்ள சிறுவர் விளையாட்டு அரங்கம், என மொத்தம் 66 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தார்.

மாநிலத்தின் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளை மேம்படுத்துவதும், அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் முக்கிய கடமையாகும். நகர்ப்புர வசிப்பிடங்களில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தி மக்கள் சிறப்பாக வாழ தகுதியான சூழ்நிலையை ஏற்படுத்திட, பாதாள சாக்கடைத் திட்டம், மழைநீர் வடிகால் திட்டம், சாலை மேம்பாட்டுப் பணிகள், குடிநீர் வசதிகள், நகர்ப்புர ஏழைகளுக்கு குடியிருப்புகளை ஏற்படுத்துதல், பூங்காக்களை அமைத்தல் போன்ற பல்வேறு உள்கட்டமைப்பு வளர்ச்சி திட்டங்களை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் 10 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் மகாத்மா காந்தி தினசரி சந்தையில் வணிக வளாகம், 14 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் மகாத்மா காந்தி தினசரி சந்தையில் அபிவிருத்திப் பணிகள், 14 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் மகாத்மா காந்தி தினசரி சந்தையினை மேம்படுத்தும் பணிகள், 14 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் டவுன் பாரதியார் பள்ளி அருகில் சிறுவர் விளையாட்டு அரங்கம், 11 கோடியே 3 இலட்சம் செலவில் டவுன் நயினார் குளம் தெற்கு பகுதியை மேம்படுத்தும் பணிகள்; என மொத்தம் 66 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே. என். நேரு, நாடாளுமன்ற உறுப்பினர் சி. ராபார்ட் புரூஸ், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.அப்துல் வகாப், ரூபி ஆர். மனோகரன், நயினார் நாகேந்திரன், சட்டப்பேரவை முன்னாள் தலைவர் இரா.ஆவுடையப்பன், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் கே.பி. கார்த்திகேயன், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் கோ. ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர். ராஜு, திருநெல்வேலி மாநகராட்சி ஆணையர் டாக்டர் என்.ஓ. சுகபுத்ரா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திருநெல்வேலி சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ்,

# ரூ.11.57 கோடியில் தாமிரபரணி ஆற்றின் கரையோரங்களை சீரமைத்து மேம்படுத்தும் பணி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு!

நெல்லை, பிப்.8-

திருநெல்வேலி மாவட்ட அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் (6.2.2025) திருநெல்வேலி மாவட்டத்திற்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கங்கை கொண்டான் சிப்காட் தொழிற்பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில், 3,800 கோடி ரூபாய் முதலீட்டில் 4,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் டாடா குழுமத்தின் துணை நிறுவனமான டாடா பவர் சோலார் நிறுவனம் அமைத்துள்ள 4.3 GW Solar Cell மற்றும் Module உற்பத்தி ஆலையை திறந்து வைத்து, 2,574 கோடி ரூபாய் முதலீட்டில், 2500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் விக்ரம் சோலார் நிறுவனம் 3 GW solar Cell மற்றும் 6 GW Module உற்பத்தி ஆலை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார்.

அதனைத் தொடர்ந்து, திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் எதிரே திருநெல்வேலி சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், 11 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் தாமிரபரணி ஆற்றின் கரையோரங்களை சீரமைத்து மேம்படுத்தும் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன்படி, தாமிரபரணி ஆற்றின் கரையோரங்கள் சீரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் 11 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இச்சீரமைப்புப் பணிகளில், துருப்பிடிக்காத (Stainless Steel) கைப்பிடிகள், 3000 சதுர மீட்டருக்கு டைல்ஸ் பதிக்கும் பணிகள், சுவரோவியங்கள், 30 கல் இருக்கைகள், 28 வண்ண மின் விளக்குகள், நான்கு அழகிய நுழைவாயில்கள் போன்றவை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 90 சதவிகித பணிகள் நிறைவுற்ற நிலையில், எஞ்சிய பணிகளையும் விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்காக விரைவில் கொண்டுவர வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநகராட்சி ஆணையரிடம் அறிவுறுத்தினார்.

மேலும், 2024-2025-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டின் முக்கிய நகரங்கள் வழியாகப் பாய்ந்திடும் வைகை, காவிரி, தாமிரபரணி மற்றும் நொய்யல் ஆகிய நதிகளை ஒட்டிய பகுதிகள் சீரமைக்கப்பட்டு, நதிநீரை தூய்மையாகப் பராமரிக்கவும், கரையோரம் பசுமையான மரங்களுடன் கூடிய பூங்காக்கள், திறந்த வெளி அரங்கம் உள்ளிட்ட முக்கிய அம்சங்களுடன் மதுரை, திருச்சி, திருநெல்வேலி, ஈரோடு மற்றும் கோயம்புத்தூரில் நதிகள் சீரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க தாமிரபரணி நதியின் மேம்பாட்டுப் பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளை விரைந்து தொடங்கிட மாவட்ட ஆட்சியர் மற்றும் அலுவலர்களிடம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், நாடாளுமன்ற உறுப்பினர் சி. ராபார்ட் புரூஸ், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.அப்துல் வகாப், ரூபி ஆர். மனோகரன், நயினார் நாகேந்திரன், சட்டப்பேரவை முன்னாள் தலைவர் இரா. ஆவுடையப்பன், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் கே.பி. கார்த்திகேயன், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் கோ. ராமகிருஷ்ணன், திருநெல்வேலி மாநகராட்சி ஆணையர் டாக்டர் என்.ஓ. சுகபுத்ரா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் இந்தியா கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் சூரம்பட்டியில் உள்ள பி.வி.பி மழலையர் பள்ளியில் தனது வாக்கினை செலுத்தினார்.

## ஈரோடு தெற்கு மாவட்டம் பெருந்துறை தெற்கு ஒன்றியத்தில்

# தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசுக்கு எதிராக கண்டனப் பொதுக்கூட்டம்!

## சு.முத்துசாமி - டாக்டர் ஆர்.மகேந்திரன் - குடியாத்தம் அன்பு - போடி காமராஜ் சிறப்புரை!

*ஈரோடு, பிப்.8-*

*ஈரோடு தெற்கு மாவட்டம் பெருந்துறை தெற்கு ஒன்றியத்தில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசுக்கு எதிராக கண்டன பொதுக்கூட்டம் இன்று (8.2.2025) சனிக்கிழமை மாலை 6:00 மணிக்கு மேக்கூர், விஜயமங்கலம் பகுதியில் பெருந்துறை தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் கே.பி.சாமி தலைமையில் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் பி.சின்னசாமி வரவேற்பில் சி.சுப்பிரமணியம் கே.நித்திக்குமார், எஸ். துர்கா தேவி, கே.குருசாமி, டி.கணேசன், பி.செல்வராஜ், சி.தங்கராஜ், பேரூர் கழக செயலாளர்கள் எஸ். திருமூர்த்தி, ஓ.சி.வி.ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி தகவல் தொழில் நுட்ப அணி இணை செயலாளர், பெருந்துறை தொகுதி பார்வையாளர் டாக்டர் ஆர்.மகேந்திரன், தலைமைக் கழக பேச்சாளர்கள் குடியாத்தம் அன்பு, போடி காமராஜ் சிறப்புரை யாற்ற உள்ளார்கள்.*

*பொதுக்குழு உறுப்பினர் டி.ஜி.கே.பூபதி, பேரூராட்சி தலைவர் சி.செல்வன் எஸ். கோபால், எஸ்.எம்.பாலசுப்பிரமணி, எம்.சி.ராஜலிங்கம், என்.வெங்கடாசலம், ஆர்.செந்தில்குமார், ஏ. லாரன்ஸ், ஆர்.ராஜேஷ், எஸ்.பரமேஸ்வரன், எம். எஸ்.குணசேகரன், பி.நவீன், எஸ்.பாலாஜி, ஆர்.மகேந்திரன், எஸ்.சங்கர், பி.கௌதம் காணிக்கை மேரி உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர்.*

*கூட்டத்தின் இறுதியில் மாவட்ட பிரதிநிதி தூய மணி நன்றியுரை ஆற்ற உள்ளார்.*

*கூட்டத்திற்கான ஏற்பாடுகளை பெருந்துறை தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கே.பி.சாமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் சிறப்பாக செய்து வருகின்றனர்.*